சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 25.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 2733E/2024 & SA 7423/E/2024**

திரு.ஜா.மரிய திலிபன் ராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருச்சி கோட்டம் (ம) மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 17.02.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஆ.சிஸினா சுகந்தி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், திருச்சிராப்பள்ளி அவர்கள் இவ்வாணையத்தில் 15.05.2026-ல் நேரில் ஆஜராகி, முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர், திருச்சி அவர்களின் 11.05.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், இவ்வழக்குகளில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் தகவல் கோரிய தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு, வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.சீ.இராகவன், தேர்வு நிலை வட்டாட்சியர் (தற்போது ஓய்வு), எனவும், அவரின் 07.05.2026 தேதியிட்ட எழுத்து மூலமான விளக்கத்தில், மனுதாரரின் 08.04.2024 தேதியிட்ட மனுவானது 10.04.2024 அன்று திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி மனுவிற்கு 16.05.2024 அன்று தகவல் மனுதாரருக்கு அனுப்பட்டதாகவும், மனுதாரர் தனக்கு தகவல் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்து 13.05.2024 அன்று அனுப்பிய

மேல்முறையீட்டு மனுவானது 15.05.2024 அன்று கிடைக்கப்பெற்று, 22.05.2024 அன்று தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மக்களவைத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் விண்ணப்பம் செய்துள்ளதாகவும், இந்திய பாராளுமன்ற தேர்தல் நடப்பது தொடர்பாக 20.03.2024 அன்று அறிவிப்பு வெளியாகி 19.04.2024 அன்று தமிழ்நாட்டில் பாரளுமன்ற தேர்தல் நடைபெற்று 04.06.2024 அன்று வாக்கு பதிவு எண்ணிக்கை நடைபெற்றதாகவும், மனுதாரர் மனு செய்த காலத்தில் பாரளுமன்ற தேர்தல் பணிகள் முழு வீச்சில் நடந்த காரணத்தினால் குறிப்பிட்ட நாளில் தகவல் வழங்க இயலவில்லை எனவும், எனவே மேற்படி வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார் எனவும், எனவே இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து தரும்படி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

3. மேற்படி, முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி அவர்களின் அறிக்கையினை ஆணையம் ஏற்கிறது. ஏனெனில், மனுதாரரின் 08.04.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவானது, 10.04.2024 அன்று திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்று, 16.05.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக (8 நாட்கள் காலதாமதமாக) மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இனிவரும் காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது வரையறுக்கப்பட்ட தினங்களுக்குள் தகவல் வழங்க தவறும் பட்சத்தில், தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்கள் மீது, பொருந்தத்தக்க விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டு, இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 2733E/2024 & SA 7423/E/2024</u>

<u>பெறுநர்</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி கோட்டம் (ம) மாவட்டம்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.ஜா.மரிய திலிபன் ராஜ், த/பெ.ரா.ஜான் பீட்டர்,
க.எண்.60, லூர்து அன்னை இல்லம்,
புனித அந்தோணியார் கோவில் தெரு,
இலுப்பூர் அஞ்சல் - 622 102.

**Copy to: File MP/PA,**